பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 03 ஞாயிற்றுக்கிழமை 19.11.2023 கதிர் 373

# தகுதி, நேர்மையின் அடிப்படையில் நீதியரசர்கள் நியமனம் வேண்டும்

## சட்டத்தரணிகள் கூட்டமைவு வலியுறுத்து

இலங்கையில் உள்ள ஒரு முக்கிய சட்ட வழக்கறிஞர் குழுவான சட்டத்தரணிகள் கூட்டமைவு, உயர் நீதிமன்றங்களுக்கான நியமனங்களில் தகுதி மற்றும் நேர்மையின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. பிரதம நீதியரசருடன் கலந்தாலோசித்து அரமைப்பு சபையினால் அங்கீகரிக்கப்படும் ஜனாதிபதியின் நியமனங்கள், வெறும் மூப்புத்தன்மையைக் காட்டிலும் இந்தப் பண்புகளை முதன்மைப்படுத்த வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

மேன்முறையீட்டு நீதிமன்றத் தின் தலைவர் நீதித்துறை ☞ 2

## இனிது ரகசியம் அல்ல!

குஷ்வு விவகாரம் மேலும் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கராதிகளின் அமைப்பு என்று கூறிய குஷ்ப யாழ்ப்பாணத்திற்கு வந்தால் அவருக்கு விளக்குமாற்றால் ஆசீர்வாதம் வழங்கப்படும் என்று இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளரும் வடக்கு மாகாண கடல் தொழிலாளர் இணையத்தின் தலைவருமான எம்.வி.சுப்ரமணியம் தெரிவித்துள்ளார்.

நடிகை குஷ்பு தமிழ் ஆயுத போராட்ட அமைப்பின் போராளிகளை பயங்கரவாதிகள் என தெரிவித்திருக்கின்றார். இது ஒரு வன்மையாக கண்டிக்கப்பட வேண்டிய விடயம். அவரது இந்த கருத்தானது எம்மவர்கள் மத்தியில் தாக்கத்தினையும் மிகுந்த ஒரு ஏமாற்றத்தினையும் தந்துள்ளது. ☞ 2

## நிந்தவூர் விபத்தில் இரு இளைஞர்கள் அநியாயச் சாவு

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாட்டுப்பளையின் பிரதான வீதியில் வெள்ளிக்கிழமை மாலை மோட்டார் சைக்கிளும் பயணிகள் பஸ்ஸும் மோதி இந்த விபத்து இடம்பெற்றது. ☞ 2

## மாவீரர் நினைவேந்தல்களுக்கு தடை விதிக்கக் கோரிய மனுக்கள் நிராகரிப்பு

மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு தடை விதிக்க கோரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களை பருத் தித்துறை மற்றும் மட்டக்களப்பு நீதிவான் மன்றங்கள் தள்ளுபடி செய்துள்ளன. இதேவேளை இந்த விடயம் தொடர்பில் மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான கட்டளை இன்று வழங்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டம், - வல்வெட்டித்துறை பொலிஸாரினால், தமது பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில், தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த தடை விதிக்க கோரி பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் மனு தாக்கல் செய்தனர்.

மனு மீது வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விசாரணைகளைத் தொடர்ந்து, நவம்பர் 21 தொடங்கவுள்ள மாவீரர் வார நிகழ்வுகளுக்கோ, நினைவேந்தலுக்கோ தடை விதிக்க முடியாது என நீதிவான் உத்தரவிட்டு மனுவைத் தள்ளுபடி செய்தார்.

இதேபோன்ற மனுக்கள் மட்டக்களப்பு மற்றும் கொக்கட்டிச்சோலை பொலிஸாரால் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யப்பட்டன. அவற்றையும் நீதிமன்றம் நிராகரித்தது.

மட்டக்களப்பில் மாவீரர் நினைவேந்தல்களுக்குத் தடை விதிக்கும்படி கேட்டும் அந்த நிகழ்வுகளில் முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தமிழ்த் தேசியப் பிரமுகர்கள் பங்கேற்பதற்குத் தடை விதிக்கக் கோரியும் பொலிஸார் இந்த மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர். எதிராளிகளுக்காக மன்றில் முற்பட்ட ஜனாதிபதி சட்டத் ☞ 2

## காங்கேசன்துறை – நாகை இடையே “சிககங்கை” பயணிகள் கப்பல் சேவை

### ஜனவரி முதல் தொடங்குகின்றது

இந்தியாவின் நாகப்பட்டினத்துக்கும் இலங்கையின் காங்கேசன் துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையில் “சிவகங்கை” என்கிற பயணிகள் கப்பல் ஜனவரி மாதம் முதல் சேவையில் ஈடுபடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அனுமதிகள் இரு நாட்டு அரசுகளாலும் வழங்கப்பட்டுள்ளதாகவும் காலநிலையைக் கருத்திக்கொண்டு சேவையைத் தொடங்குவதற்கான நாள் தீர்மானிக்கப்படும் என்றும் கப்பல் நிறுவனத் ☞ 8

## சீன அதிபரின் சிறப்புக் குழு இலங்கையை வந்தடைந்தது

சீன ஜனாதிபதி சீ ஜின்பிங்கின் சிறப்பு தூதுவர் ஷென் ஹிகின் உள்ளிட்ட தூதுக்குழுவினர் நேற்று இலங்கையை வந்தடைந்தனர்.

மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணமாக அவர்கள் இலங்கை வந்துள்ளனர் என்று அயலுறவுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது. நவம்பர் 21 வரை நாட்டில் தங்கி ☞ 8

## பொலிஸ் மா அதிபரின் சேவை நீடிப்புக்கு அரசமைப்பு பேரவை மீண்டும் நிராகரிப்பு

பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னவுக்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்ட சேவை நீடிப்பை அரசமைப்பு பேரவை மீண்டும் நிராகரித்தது.

பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன ஓய்வு பெறும் வயதை அடைந்துவிட்டார். எனினும் அவரது இடத்திற்குப் புதிய பொலிஜ மா அதிபர் நியமிக்கப்படாததன் காரணமாக, நான்காவது தடவையாக அவருக்குப் பதவி நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் 35ஆவது பொலிஸ்மா அதிபராக சி.டி.விக்கிரமரத்ன 2020ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டார். அவரது பதவிக் காலம் 2023 மார்ச் 25 நிறைவடைந்தது.

அவருக்குப் பதிலாகப் புதிய பொலிஸ் மா அதிபரை நியமிப்பதில் இழுபறி நிலை நீடிக்கின்றது. பணிநிலை மூப்பு அடிப்படையில் அந்தப் பதவிக்கு நியமிக்கப்படக் கூடியவர்கள் மீது மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டுக்கள் பொது அமைப்புக்களால் எழுப்பப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸ் மா அதிபர் நியமனம் ☞ 8

## இந்திய மீனவர்கள் 22 பேர் நேற்று கைது

யாழ்ப்பாணம், பருத்தித்துறை கடற்பரப்புக்குள் அத்துமீறி எல்லை தாண்டிய குற்றச்சாட்டின் கீழ் இந்திய மீனவர்கள் 22 பேர் நேற்று மதியம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இந்தியாவின் தமிழகம் - பாம்பன் பகுதியில் இருந்து இரண்டு படகுகளில் வந்து மீன்பிடித்த 22 இந்திய மீனவர்களையுமே கடற்படையினர் கைது செய்தனர்.

கைதான அனைவரும் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குக் கொண்டு செல்லப் பட்டனர்.

இன்று நாளை காலை யாழ். மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு பருத்தித் துறை நீதிவானிடம் முற்படுத்தப்படவுள்ளனர்.

## யாழ்ப்பாணத்தில் மார்கழி இசை விழா

### வணிகர் கழக ஏற்பாட்டில் நடக்கவுள்ளது

யாழ்ப்பாணக் கலாசார மத்திய நிலையத்தில் மார்கழி இசை விழா நடத்தப்படவுள்ளதாக யாழ்ப்பாணம் வணிகர் கழகத் தலைவர் ஆர். ஜெயசேகரன் தெரிவித்தார். வடமாகாணத்தைச் சேர்ந்த சிறிய நடுத்தர உற்பத்தியாளர்களின் உற்பத்திப் பொருள் கண்காட்சியும் அதனுடன் சேர்ந்ததாக நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண வணிகர் கழகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இசை விழா தொடர்பாக அறிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களுடைய கலை கலாச்சார பண்பாடுகளை ☞ 2

## உருக்குலைந்த நிலையில் சடலம் பொன்னாலையில் நேற்று மீட்பு

யாழ். மாவட்டம், வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொன்னாலை சந்தியில் இருந்து 100 மீற்றர்கள் தூரத்தில் உள்ள புதர் ஒன்றிற்குள் இருந்து உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரது சடலம் கண்டுபிடிக்கப் பட்டது.

சடலத்தில் நீல நிற சேட்டும், நீலம் மற்றும் சாம்பல் நிற சாறமும் காணப்படுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். சடலம் உடனடியாக அடையாளம் காணப்படவில்லை. இருப்பினும் நவம்பர் 14 பொன்னாலை கிராம அலுவலர் அலுகத்திற்கு வந்து சென்ற ஒருவருடையதாக அது இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

பொன்னாலை ☞ 8

## நாடு திரும்பினார் ரணில்

மாலைதீவின் புதிய ஜனாதிபதியின் பதவியேற்பு நிகழ்வில் கலந்துகொள்வதற்காகச் சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடு திரும்பினார். மாலைதீவுக் குடியரசின் அதிபராகத் தெரிவு செய்யப்பட்ட மொஹமட் முய்சுவின் பதவியேற்பு விழாவில் பங்கேற்ற அவர் தனது வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

மாலைதீவில் தங்கியிருந்தபோது அவர் அமெரிக்க அபிவிருத்திக்கான அமெரிக்க முகவர் அமைப்பின் நிர்வாகி சமந்தா பவரையும் சந்தித்துப் பேசினார்.

வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் இரு தரப்பு ஒத்துழைப்பு குறிப்பாக நிதி ஒத்துழைப்பு தொடர்பாக இருவரும் கலந்துரையாடினர்.

## வற் வரி வசூல் குறித்து கோப் குழுவில் ஆராய்வு

பல்வேறு பொருட்களுக்கு பொதுமக்கள் செலுத்தும் பெறுமதி சேர் வரி (வற்) அரசுக்கு முறையான வகையில் கிடைக்கப்பெறுகின்றதா என்பது தொடர்பில் அரச கணக்குகள் பற்றிய குழுவில் (கோபா) நேற்று ஆராயப்பட்டது

தற்போது சுமார் பதின்மூன்றாயிரம் நிறுவனங்கள் பெறுமதி சேர் வரி செலுத்துவதற்கு பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும், அந்த நிறுவனங்கள் உரிய வரியை அரசுக்கு செலுத்துவது குறித்து ஆய்வு செய்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பொது மக்களிடமிருந்து வரி அறவிடும் நிறுவனங்கள் அந்த வரி முறையாக அரசுக்குக் கிடைக்கப்பெறுவதற்கான பொறிமுறையை தயாரிக்க வேண்டும் என இதன்போது குழு சுட்டிக்காட்டியது.

கணினிக் கட்டமைப்பை உள்நாட்டு இறை வரித் திணைக்களம் பொ-றுப்பேற்றுப் பராமரிக்க ☞ 2

## இனி இது .....

இங்குள்ள நூற்றுக்கணக்கான யுவதிகளை கற்பழித்து, இளைஞர்களையும் கொன்று குவித்து, எங்களுடைய சொத்துக்களுக்குநாசம்விளைவித்து, எங்களுடைய போராட்டத்தையும் நலிவடைய செய்தவர்தான் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி.

அப்படிப்பட்ட ராஜீவ் காந்தியை தலைவராக கொள்கின்ற இந்திய நாட்டின் நடிகை குஷ்பு எங்களுடைய நாட்டுக்காகவும், தமிழ் இன மக்களுக்காகவும், விடுதலைக்காகவும் போராடிய புனிதமான போராளிகளை பயங்கரவாதிகள் என வர்ணிப்பது மிகவும் வேதனையான விடயம். இந்த விடயத்தை நாங்கள் கண்டிக்கின்றோம்.

சிங்களப் பேரினவாதிகளை மகிழ்விப்பதற்காகஇந்தியாவிலிருந்து குறிப்பாக பா.ஜ. க பிரமுகர்கள் இலங்கைக்குவந்துபோகின்றார்கள். அவர்கள் வந்து போகும் நோக்கமே இலங்கையை ஒட்டுமொத்தமாக தங்களுக்கு ஆதரவுடைய நாடாக வைத்திருப்பதுதான். அவர்களுக்குத் தெரியும்தெற்குமுழுவதும்சீனாவின் வசமாக போய்விட்டது. வடக்கில் தான் இப்பொழுது கொஞ்சம் இருக்கின்றது. அதையாவது தக்க வைத்துக் கொள்வதற்காகத்தான் இந்தியா முயற்சிக்கின்றது.

இந்த முயற்சியை முன்னெடுக்கின்ற இந்தியாவின் பிரமுகராக வருகின்ற குஷ்பு வேண்டுமானால் தெற்குக்கு போய் ஆதரவையும்இலங்கையினுடைய அரவணைப்பையும் கோரலாமே தவிர, புனித வேள்வி நடந்த பூமியிலே அதுவும் யாழ்ப்பாண மண்ணிலே கால் வைக்கக் கூடாது. அப்படி கால் வைத்தால் கண்டிப்பாக அந்த மண் மாசடையும்.

எனவே குஷ்பு இலங்கைக்கான விஜயத்தை தெற்கு விஜயமாக மாற்றிக் கொள்ள வேண்டும். இல்லையேல் இந்தியாவிலிருந்து குஷ்பு இலங்கைக்கு வருவதை நிறுத்திக் கொள்ள வேண்டும். இல்லாமல் அதையும் தாண்டி அவர் இங்கே வருவாராக இருந்தால், குறிப்பாக யாழ்ப்பாணத்திற்கு வருவாராக இருந்தால் இங்கே உள்ள அன்னையர்கள் கண்டிப்பாக குஷ்பூ அவர்களை எதிர்ப்பார்கள். துடைப்பக் கட்டையால் அவருக்கு ஆசிர்வாதம் செய்வார்கள். அதை விடகழிவுபொருட்களையும்அதிலே கலந்து ஆசீர்வாதம் செய்து திருப்பி அனுப்புவார்கள் என்பது உறுதி.

குஷ்பு பகிரங்கமாக தமிழினத்தின் முன் மண்டியிட்டு தான் கூறிய தமிழ் ஆயுத போராட்ட அமைப்பை பயங்கரவாதிகள் என்ற கருத்தை மீளப்பெற வேண்டும். அதற்கு பகிரங்கமாக மன்னிப்பு கேட்க வேண்டும். இல்லையேல் நாங்கள் அவருடையவாழ்க்கையைஅல்லது வரலாற்றின் சில புள்ளிகளை தோலுரித்துக் காட்ட வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படும். எனவே மற்றவர்களை கொச்சைப்படுத்தும் பொழுதுதாங்கள்சுத்தமானவர்களாக இருக்க வேண்டும். எனவே அந்த பாதிப்பையும் அவர்கள் ஏற்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படும். எனவே இந்த யாழ்ப்பாணம் வருகின்ற வருகையை இரத்து செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

சுவஸ்திகா விவகாரம் ஒரு புறத்தில் பட்டையைக் கிளப்புகின்றது என்றால் குஷ்பு விவகாரமும் இப்போது பட்டையைக் கிளப்பத் தொடங்கியிருக்கிறது. பார்க்கலாம் எங்கே போய் முடியப் போகின்றது என்று.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தகுதி, நேர்மையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலகத்தை முறைகேடாகப் பயன்படுத்தினார்என்றுகுற்றஞ்சாட்டி விளையாட்டு அமைச்சர் ரொஷான் ரணசிங்க 2023 நவம்பர் 8 நாடாளுமன்றத்தில் முன்வைத்த குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும் வகையில், விரைவான விசாரணை ஒன்றுநடத்தப்படவேண்டும்என்றும் சட்டத்தரணிகள் கூட்டமைவு கோரியுள்ளது.

உயர் நீதிமன்ற நீதிபதிக்கு எதிரான எந்தவொரு குற்றச்சாட்டின் மீதும் தீவிர அக்கறை செலுத் தப்படவேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். அதேநேரம், சரியான ஆதாரங்களோ, முறைப்பாடுகளோ இன்றி நாடாளுமன்ற சிறப்புரிமைகளைப் பயன்படுத்திநீதிமன்றஉத்தரவுகளை விமர்சிப்பது அல்லது குறைமதிப் பிற்கு உட்படுத்துவது குறித்தும் அவர்கள் தமது கவலையை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஒரு நீதித்துறை அதிகாரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளின் செல்லுபடியை தீர்மானிக்க, விரைவான, வெளிப்படையான மற்றும் வலுவான நடவடிக்கைகள் அவசியம். அரசமைப்பின் சரத்துகள் 3 மற்றும் 4(உ) மூலம் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள இலங்கையின் மக்களின் உரிமைகள் மற்றும் இறையாண்மையை நிலைநிறுத் துவதற்கு அடிப்படையான நீதித் துறையின் ஒருமைப்பாட்டையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்கு இத்தகைய நடவடிக்கைகள் அவசியம்.

நீதித்துறைஅதிகாரிகளுக்குஎதிரான ஒழுக்காற்று விசாரணைகளுக்கு வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூறும் செயல்முறை ஒன்று இல்லை. எனவே உள்ளக ஒழுங்குமுறை அமைப்பு முறை ஒன்று நிறுவப்படவேண்டும். குற்றச்சாட்டுகளுக்குஉடனடியாகவும் பகிரங்கமாகவும் தீர்வுகாணப்பட வேண்டும், நாடாளுமன்றத்தின் மூலம் பதவி நீக்கம் என்பது கடைசி முயற்சியானதாகவே இருக்கவேண்டும்.

கடமைதவறுதல்அல்லதுதவறான நடத்தை ஆகியன தொடர்பான எந்தவொரு குற்றச் சாட்டின் மீதும் பகிரங்கமான, வெளிப் படையான, நம்பகமான விசாரணை நடத்தப்படவேண்டும். இது சில ஆண்டுகளுக்கு முன்பு முன்மொழியப்பட்ட உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கான நடத்தை விதிகள் மற்றும் நெறிமுறைகளை முறையாகப் பிரகடனப்படுத்தப்பட வேண்டும் - என்று அந்தக் கூட்டமைவு மேலும் வலியுறுத்தியுள்ளது.

உபுல் ஜயசூரிய, கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன, ஜெஃப்ரி அழகரத்தினம், எம்.ஏ.சுமந்திரன், டினல் பிலிப்ஸ், எஸ்.டி. ஜெயநாகா, எம்.எம். சுஹைர், பேராசிரியர் தீபிகா உடகம, உபுல் குமாரப்பெரும உள்ளிட்ட பலர் இந்தக் கூட்டமைவில் இடம்பெற்றுள்ளனர்.

## வற் வரி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியுமா? என குழுவின் தலைவர் அதிகாரிகளிடம்கேள்விஎழுப்பினார். எனினும் இதுவரை சம்பந்தப்பட்ட மனிதவளம்முறையாகக்கிடைக்காத நிலையில் அந்தக் கட்டமைப்பைப் பொறுப்பேற்றுப் பராமரிக்க முடியாது என உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அதிகாரிகள் குழுவில் அறிவித்தனர்.

கணினிக் கட்டமைப்புடன் 6 நிறுவனங்கள் இணைந்து செயற்படுவதுடன் கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் ஒருசில தொழில்நுட்பக் காரணங்களுக்காக கணினிக் கட்டமைப்புடன் இணைவதுதாமதமடைந்துள்ளதாக குழுவில் புலப்பட்டது.

அதற்கமைய,உடனடியாகதமது கணினிக்கட்டமைப்பில்சம்பந்தப்பட்ட இற்றைப்படுத்தலை மேற்கொண்டு கணனி கட்டமைப்புடன் இணைந்து செயற்படுமாறு கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்துக்கு குழு பரிந்துரை வழங்கியது.

அதன் முன்னேற்றம் தொடர்பில் அறிக்கையை எதிர்வரும் ஜனவரி முதலாம்திகதிக்குமுன்னர்குழுவுக்கு சமர்பிக்குமாறும் ஆலோசனை வழங்கப்பட்டது.

தற்பொழுது பல வகைப் படுத்தல்களின் கீழ் அறவிடப்படும் வரி தொடர்பான முழுமையான அறிக்கையொன்றையும், அறவிடப்படவுள்ள 943 பில்லியன் ரூபாநிலுவைத்தொகைதொடர்பான முழுமையான அறிக்கையையும் குழுவிற்குவழங்குமாறும்குழுவின் தலைவர்ஆலோசனைவழங்கினார்.

புதிய வரி செலுத்துபவர்களின் பதிவு குறித்தும் அதிகாரிகளிடம் குழு வினவியது. அதற்கமைய, 2023 இல் இதுவரை ஒரு இலட்சத்து 98,253 புதிய வரி செலுத்துபவர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

18 வயதுக்கு அதிகமான பிரஜைகள் சுமார் 16 மில்லியன் பேர் உள்ளனர் என இனங்காணப்பட்டுள்ளதாகவும்இ அவர்களை வரி செலுத்தும் செயற்பாட்டில் சேர்த்துக்கொள்வதற்கு விசேட வேலைத்திட்டம் செயற்படுத்தப் படுவதாகவும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

## நிந்தவூர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இளைஞர்களில் ஒருர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றையவர் கடுமையான காயங்களுடன் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.உயிரிழந்தஇருவரும் 19, 23 வயதானவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸும் கல்முனையில் இருந்து அக்கரைப்பற்று நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுமே விபத்துக்குள்ளாகின.

உயிரிழந்த இளைஞர்கள் இருவரும் கல்முனை பிரதேச செயலாளர் பிரிவு உட்பட்ட மருதமுனையில் வசிப்பவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## மாவீரர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரணிஎம்.ஏ.சுமந்திரன், "உயிரிழந்த ஒருவருக்காக நினைவேந்தும் உரிமை ஒவ்வொருக்கும் உண்டு. அது அடிப்படை உரிமையும்கூட. அதை மறுக்கும் நடவடிக்கைக்கு நீதிமன்றம் துணை போகக்கூடாது. மாறாக, அந்த உரிமை நிலைநாட்டப்படுவதை நீதிமன்றம் உறுதி செய்ய வேண்டும்" என்ற சாரப்பட நீண்ட வாதத்தை முன்வைத்தார்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிவான் பொலிஸாரின் மனுக்களைத் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தார்.

மட்டக்களப்பு பொலிஸாரின் விண்ணப்பம் முதலில் நிராகரிக்கப்பட்டநிலையில், அதையடுத்து கொக்கட்டிசோலை பொலிஸாரின் விண்ணப்பம்நீதிமன்றத்தில்எடுத்துக் கொள்ளப்பட்டது. முன்னைய வழக்கின் காரணங்களின் அடிப் படையில் இந்த விண்ணப்பமும் நீதிமன்றத்தால் நிராகரிக்கப் பட்டது.

# மோ. சைக்கிள்கள் மோதி விபத்து பொலிஸார் உட்பட இருவர் சாவு



வவுனியா ஏ9 வீதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட இருவர் உயிரிழந் தனர்.

சாந்தசோலை சந்தியில் இடம்பெற்ற இந்த விபத்தில் மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, ஓமந்தை பகுதியில் இருந்து வவுனியா நகர் நோக்கி பொலிஸ்உத்தியோகத்தர் ஒருவர் மோட்டர் சைக்கிளில் பயணித்துள்ளார். குறித்தமோட்டர் சைக்கிள் வவுனியா, ஏ9 வீதி சாந்தசோலை சந்திப் பகுதியில் பயணித்தபோது, எதிர் திசையில் இருந்து வந்த மோட்டர் சைக்கிள் ஒன்று சாந்தசோலைசந்தியில் திரும்ப முற்பட்டுள்ளது. இதன்போது இரு மோட்டர் சைக்கிள்களும்மோதி விபத் துக் குள்ளாகின.



விபத்தில் படு காயமடைந்த இருவரும் உடனடியாக மீட்கப்பட்டு வவுனியாவைத்தியசாலையில் சேர்க் கப்பட்டனர்.

எனினும், பொலிஸ் உத்தியோகத்தரானஇளைஞர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதே உயிரிழந்திருந்தார். காயமடைந்த மற்றையவரானமுதியவர்அவசரசிகிச்சை பிரிவில்சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் அக்கராயன்பகுதியில் பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவில் பணிபுரியும் வெலிஓயா பகுதியைச் சேர்ந்த திசாநாயக்கா (வயது 27), சாந்தசோலையைச் சேர்ந்த சண்முகம் நாதன் (வயது 63) ஆகிய இருவருமே உயிரிழந்தனர்.



# விற்பதற்கு எதுவும் இல்லாததால் ஜனாதிபதி நாட்டின் நீர் வளத்துக்கும் விலைபேசுகிறார்

## விஜித ஹேரத் போட்டுத்தாக்கு



காணி மற்றும் அரச கட்டடங்களுக்கு விலை பேசி முடிந்த நிலையில் விற்பதற்கு ஏதும்இல்லாத காரணத்தால்தற்போது நாட்டின் நீர் வளத்துக்கும் விலைபேசப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் டிஸ்டிலேன்டை காண்பித்து ஒட்டு மொத்த மக்களையும் சோமாலியாவுக்குள் தள்ளும் முன்மொழிவுகளை ஜனாதிபதி முன்வைத்துள்ளார். ஊழல்வாதிகளுக்கு மீண்டும் வரிச்சலுகை வழங்கப்பட்டுள்ளது என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பின் மீதான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நாங்கள்தெரிவுசெய்தோம். ஆகவேஅவர்எமது கொள்கைக்கு அமைய செயற்பட வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் குறிப்பிடுகிறார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பொதுஜன பெரமுனவினர் தெரிவுசெய்ததால் அவர்களின் விருப்பத்துக்கு அமைய செயற்பட முடியாது என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன குறிப்பிடுகிறார்.

ஜனாதிபதியின் வரவு செலவுத் திட்டத்துக்கு இவர்கள் உரிமை கோருகிறார்கள். 2002 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட புதிய லிபரல்வாத கொள்கைக்கு அமையவே ஜனாதிபதி வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துள்ளார். நாட்டின் வளங்களை விற்றல், கடன் பெறல், வரி விதித்தல், விற்று உண்ணுதல் என்பனவே ஜனாதிபதியின் பொருளாதாரக் கொள்கையாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த காலங்களில் பசுமை பொருளாதார வரவு செலவுத் திட்டம், டிஜிற்றல் வரவு செலவுத் திட்டம் என்று குறிப்பிட்டுக் கொண்டு பலவற்றை சமர்ப்பித்தார். ஆனால் எவையும் நடைமுறைக்கு சாத்தியமாகவில்லை. 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் டிஸ்டிலேன்டை காண்பித்து ஒட்டுமொத்த மக் களையும் சோமாலியாவுக்குள் தள்ளும் முன்மொழிவுகளை முன்வைத்துள்ளார்.

வரி விதித்தல், அரச நிறுவனங்கள் மறுசீரமைப்புமற்றும்விற்பனைசெய்தல், கடன் மறுசீரமைப்பு, எரிபொருள் விலையேற்றம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆகிய நிபந்தனைகளை சர்வதேச நாணய நிதியம் முன்வைத்துள்ளது. இந்த நிபந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு இலாபமடையும் ஸ்ரீ லங்கா ரெலிகொம், காப்புறுதி கூட்டுத்தாபனம் ஆகிய அரச நிறுவனங்களை விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அரச நிறுவனங்களை விற்க இடமளிக்க முடியாது என பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள்கூச்சலிடுகிறார்கள். ஆனால் விற்பனைக்கான சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நிலம், அரச கட்டடங்களுக்கு விலை பேசியுள்ள நிலையில் விற்பதற்கு ஏதும் இல்லாத காரணத்தால் தற்போது நாட்டின் நீர்வளத்தையும் விற்பனை செய்வதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். 'நீர் சந்தை முகாமைத்துவம்' என்று குறிப்பிட்டுக் கொண்டு நீர்வளத்தை விற்பதற்கு அமைச் சரவை அனுமதி வழங்கியுள்ளது. இந்த யோசனை ஒன்றும் புதிதல்ல.

முன்னாள் அமைச்சர் சரத் அமுனுகம நீர்பாசனத்துறை அமைச்சராகப் பதவி வகித்த போது இதே யோசனை கொண்டு வரப்பட்டது. விவசாயிகள் மத்தியில் இருந்து எழுந்த போராட்டத்தால் அந்த யோசனை பிற்போடப்பட்டது. பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் தற்போது மீண்டும் அந்த யோசனைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஊழல் மோசடி முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது. இதற்கான எவ்வித யோசனைகளும் வரவு செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்படவில்லை. மத்திய வங்கியின் ஊழல் மோசடியில் பெயர் குறிப்பிட்ட அர்ஜுன அலோசியஸ், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானதன் பின்னர் மீண்டும் வலுப்பெற்றுள்ளார்.

அர்ஜுன அலோசியஸின் மதுபான உற்பத்தி நிறுவனம் இந்த ஆண்டு மாத்திரம் 148 கோடி ரூபா வருமானம் பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. ஆனால் முறையான வரி செலுத்தப்படவில்லை. போலி ஸ்டிக்கர் ஒட்டப்பட்ட 55949 மதுபான போத்தல்கள் கைப்பற்றப்பட்டன. இவற்றில் 51361 போத்தல்கள் அர்ஜுன அலோசியஸின் மெண்டிஸ் நிறுவனத்துக்குரியது. ஆகவே ஊழலை இல்லாதொழிக்க எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக ஊழல் மோசடியாளர்களுக்கு வரிச் சலுகை வழங்கப்பட்டுள்ளது. - என்றார். (05)

# நாணய நிதிய நிபந்தனைகளுக்கு அமைய வரவு – செலவு திட்டமெனில் அரசு எதற்கு?

## ஹரிணி அமரசூரிய கேள்வி



ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் நாட்டை முன்னேறக்கூடிய எந்தத் திட்டமும் இல்லை. நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு ஏற்ப வரவு செலவுத் திட்டம் இருக்குமாயின் நாட்டில் அரசாங்கம் எதற்கு? இதன் பின்னரும் ஜனாதிபதியால் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்ற முடியாது. மக்கள் அதை விளங்கிக் கொள்வார்கள் என தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

நீண்ட காலம் அரசியலில் ஈடுபடுபவர் என்ற வகையில் நாடு வங்குரோத்து அடைவதற்கு ரணில் விக்கிரமசிங்கவும் ஒரு பிரதான காரணம்.

இன்று புராதனகதைகளையும், நகைச்சுவை கதைகளையும் கூறி வெறும் வார்த்தைகளால் மக்களை ஏமாற்றலாம் என நினைக்கிறார்.

நாட்டில் காணப்படும் பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி இடத்தில் எந்தவொரு தீர்வும் கிடையாது. டீல் அரசியலையும், கடன் விற்பனை செய்யும் வழிமுறைகளையுமே அவர் தொடர்ந்தும் பின்பற்றுகிறார்.

இதேவேளை சர்வதேச நாணயத்தின் நிபந்தனைகளுக்கு ஏற்ப நாட்டின் வரவு -செலவுத் திட்டம் அமைய வேண்டும் எனக் கூறுகிறார்கள். அவ்வாறாயின் நாட்டிற்கு நிதி அமைச்சர் எதற்கு? அமைச்சரவை எதற்கு? நாடாளுமன்றத்தில் வரவு செலவுத்திட்டத்தை ஏன் முன்வைக்கவேண்டும்? இந்த பொறுப்பினை சர்வதேச நாணயத்திற்கு ஒப்படைத்தால் இதனை விட இலகுவாக இருக்கும். அதன் மூலம் நிதியை சேமிக்கலாம் அல்லவா?

நாட்டின் ஜனாதிபதி, அரசாங்கம், அமைச்சரவை சர்வதேச நிதி நிறுவனங்களுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் போது கட்டாயமாக நாட்டுக்குப் பொருந்தக்கூடியதும், மக்களுக்கு பொருத்தமானதும், எமது கொள்கைகளுக்கு ஏற்றாற்போலதொரு வரவு செலவுத்திட்டத்தையுமே கொண்டு வரவேண்டும்.

எமது கொள்கைகளுக்கு அமைய சர்வதேச நிதி நிறுவனங்களுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள வேண்டும். அனைத்து சந்தர்ப்பங்களிலும் நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டுமானால் நாட்டில் அரசாங்கம் என்ற ஒன்று தேவையில்லை.

எனவே கொள்கையில்லாத, நோக்கமில்லாத அரசாங்கம் ஒன்றே நாட்டில் உள்ளது. நாட்டு மக்கள் உறுதியான தீர்மானமொன்றை எடுத்துள்ளனர். அடுத்த தேர்தலில் மாற்றமொன்றை கொண்டுவருவதற்கு தீர்மானித்துள்ளனர். - என்றார். (05)

# கோட்டாவை ஆதரித்த அனைவருக்கும் உயர் நீதிமன்றத் தீர்ப்பு சாட்டை அடி

## லக்ஷ்மன் கிரியெல்ல வைகிறார்

உயர் நீதிமன்றம் பொருளாதாரக் கொலை தொடர்பாக வழங்கி இருக்கும் தீர்ப்பு வரலாற்று முக்கியமானதாகும். ஆட்சியாளர்கள் அநீதியான முறையில் பணம் சம்பாதித்திருந்தால், அது தொடர்பில் தேடிப்பார்க்க தயாராக இருக்கிறது என்ற செய்தியையும் இதன் மூலம் உயர் நீதிமன்றம் தெரிவித்திருக்கிறது. அத்துடன் நீதிமன்றத் தீர்ப்பு கோட்டாபய ராஜபக்சவுக்கு ஆதரவளித்த அனைவருக்கும் பொருத்தம் என எதிர்க்கட்சி பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வரவு செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான நான்காம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

தேர்தல் பிரசாரத்துக்கு உதவி செய்தால் பதவிக்கு வந்ததுடன் வரிகளைக் குறைத்து நிவாரணம் வழங்குவதாக கோட்டாபய ராஜபக்ச பெரிய வியாபார நிறுவனங்களுக்கு வாக்குறுதி வழங்கியிருந்தார்.

அதன் பிரகாரமே நாட்டுக்கு கிடைத்துவந்த வரி வருமானத்தைக் குறைப்பதற்கு அவர் தீர்மானித்தார். கோட்டாபய ராஜபக்ச தேர்தலுக்கு முன்னர் சங்கிரில்லா ஹோட்டலில் பெரும் வியாபாரிகளை சந்தித்து கலந்துரையாடியபோதே இந்த வாக்குறுதியை வழங்கியிருந்தார்.

இதன் போது நாட்டில் இருக்கும் பெரும் வியாபாரி ஒருவர் 1000 மில்லியன் ரூபா வழங்கினார். இந்த விடயங்களை நாங்கள் இந்த சபையில் ஆரம்பத்திலேயே தெரிவித்திருந்தோம். அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததுடன் வரி குறைப்பு மேற்கொண்டதாலேயே நாட்டுக்கு இந்த நிலை ஏற்படக் காரணமாகும்.

அத்துடன் வரி குறைப்பு செய்து நாட்டுக்கு கிடைத்து வந்த வருமானத்தை இல்லாமல் செய்ததாலே நாடு வங்குரோத்து அடைய காரணமாகும். வரியை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்போது அதற்கு ஆளும் கட்சி உறுப்பினர்கள் யாரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. அதனால் இந்த நாடு வங்குரோத்தடைய பொறுப்புக்கூறவேண்டியவர்கள் என நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு அரசாங்கத்தில் இருக்கும் ஏனையவர்களுக்கும் பொருத்தமாகும்.

அத்துடன் பொருளாதார கொலைகாரர்கள் தொடர்பாக நீதிமன்றம் தீர்ப்பு வழங்க முன்னர் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவை இதனைத் தெரிவித்திருந்தது.

பொருளாதார நெருக்கடிக்கு இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும் என மனித உரிமை பேரவை கடந்த கூட்டத்தின்போது இதனைத் தெரிவித்திருந்தது.

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததுடன் சர்வதேச நாடுகளில் வங்கிகளில் மறைத்துவைக்கப்பட்டிருந்த திருட்டுப்பணங்களை மீள பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்த போது, அது தொடர்பில் சாட்சிகளை முன்வைத்து எமது நாட்டின் நீதிமன்றத் தீர்ப்பை பெற்றுக்கொண்டு வருமாறே தெரிவித்திருந்தது.

ஆனால் அந்தக் காலத்தில் அவ்வாறான தீர்ப்பொன்றை பெற்றுக்கொள்வது சாத்தியமில்லை. அதனால் வெளிநாடுகளில் வங்கிகளில் வைக்கப்பட்டிருக்கும் திருட்டுப்பணங்களை நாட்டுக்கு கொண்டுவர நீதிமன்றம் உத்தரவிட்டால் அந்தத் தீர்ப்பை அனைத்து நாடுகளும் ஏற்றுக்கொள்கின்றன. ஆனால் இலங்கையில் அது இடம்பெறவில்லை.

என்றாலும் உயர் நீதிமன்றம் பொருளாதார கொலை தொடர்பாக தற்போது வழங்கி இருக்கும் தீர்ப்பு வரலாற்று முக்கியமானதாகும். ஆட்சியாளர்கள் அநீதியான முறையில் பணம் சம்பாதித்திருந்தால், அது தொடர்பில் தேடிப்பார்க்கத் தயாராக இருக்கிறது என்ற செய்தியை இதன் மூலம் உயர் நீதிமன்றம் தெரிவித்திருக்கிறது.

எனவே வரி குறைப்புக்கு கோட்டாபய ராஜபக்சவுக்கு ஆதரவளித்தவர்களுக்கு என்ன தண்டனை வழங்க முடியும் என எனக்குத் தெரிவிக்க முடியாது. ஆனால் இவர்கள் அனைவரும் களனி விகாரைக்கு சென்று பாவமன்னிப்புக் கோர வேண்டும்.

அத்துடன் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதாரநெருக்கடியில்இருந்துமீள பாரியளவிலான முதலீகள் நாட்டுக்குள் மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு இல்லாமல் இனனும் 10 வருடங்களுக்காவது இந்தப் பிரச்சினை தொடரும். - என்றார். (05)

# பிராந்திய பொருளாதார கூட்டு ஒப்பந்தத்தில் இணையும் இலங்கையின் விண்ணப்பம் குறித்து விசேட அவதானம்



பிராந்திய பொருளாதாரக் கூட்டு ஒப்பந்தத்தில் இணைவதற்கான இலங்கையின் விண்ணப்பம் குறித்து பதில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் தாரக்க பாலசூரிய, வியட்நாம் தூதுக்குழுவினருக்கிடையிலான சந்திப்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

கம்யூனிஸ்ட் கட்சியின் காலம் உறுப்பினரும், வியட்நாமின் மாகாணக் கட்சிக் குழுவின் செயலாளருமான புய் வான்ங்கியெம் தலைமையிலான 35 உறுப்பினர்களைக் கொண்ட உயர்மட்ட வியட்நாமிய தூதுக் குழுவினர், பதில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் தாரக்க பாலசூரியவை வெள்ளிக்கிழமை வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் சந்தித்தனர்.

இந்த சந்திப்பின் போது அரசியல், வர்த்தகம், முதலீடு, கலாசாரம், கல்வி மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளில் பரஸ்பரம் ஆர்வமுள்ள பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது. இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் ஒருங்கிணைத்து மேம்படுத்துவதற்கான அர்ப்பணிப்பு இந்தச் சந்திப்பின்போது மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின் போது, பிராந்திய பொருளாதாரக்கூட்டுஒப்பந்தத்தில் இணைவதற்கான இலங்கையின் விண்ணப்பம் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஊழலும் போரும்

**முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச, முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ச, இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் உட்பட பல அரசியல் மற்றும் பிற தலைவர்களுக்கு எதிராக உச்ச நீதிமன்றம் செவ்வாய்கிழமையன்று வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியது.**

**ஐவரடங்கிய நீதிபதிகளில் பெரும்பான்மையான நீதிபதிகள் ராஜபக் சக்களை குற்றவாளிகள் என்று பெரும்பான்மை அடிப்படையில் தீர்ப்பளித்தது. , முன்னாள் திறைசேரிச் செயலர் எஸ்.ஆர். ஆட்டிகல மற்றும் முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர்களான பி.பி. ஜயசுந்தர மற்றும் சமன் குமாரசிங்க ஆகியோர் மக்களின் நம்பிக்கையை மீறியுள்ளனர் என்றும் நீதிமன்றம் குற்றஞ்சாட்டினார்.**

**அரசமைப்பின் 12(1) பிரிவின்படி சட்டத்தின் சமமான பாதுகாப்பிற்கான அடிப்படை உரிமைகளை இந்த தலைவர்கள் மீறியுள்ளனர் என்று இலங்கையின் உயர் நீதிமன்றம் மேலும் கூறியுள்ளது. தலைவர்களும் உயர் அதிகாரிகளும் மனுதாரர்களுக்கு நட்டஈடு வழங்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிப்பது பொருத்தமாக இருக்காது என தலைமை நீதிபதி ஜயந்த ஜயசூரிய குறிப்பிட்டார். எனவே, உச்ச நீதிமன்றம் இழப்பீடு வழங்க உத்தரவிடவில்லை. இலங்கையில் நிலவும் நெருக்கடிக்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி, பொது நலன் கருதி குழுவுக்கு எதிராக அவர்கள் மனு தாக்கல் செய்தனர். லஞ்சம் மற்றும் ஊழல், கிக்பேக், கமிஷன்கள் மற்றும் பிற பொருளாதார குற்றங்கள் மூலம் சம்பந்தப்பட்ட தொகை கணக்கிட முடியாதது.**

**மார்கழி 9 சர்வதேச ஊழல் ஒழிப்பு தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் கூற்றுப்படி, ஊழல் மோதலைப் பின்தொடர்வது மட்டுமல்லாமல், மோதலுக்கான மூலகாரணங்களில் ஒன்றாகவும் அமைந்துள்ளது. 2023 சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினம் (IACD) ஊழல் எதிர்ப்பு மற்றும் அமைதி, பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி ஆகியவற்றுக்கு இடையேயான முக்கியமான தொடர்பை முன்னிலைப்படுத்த முயல்கிறது. ராஜபக்சக்களுக்கு எதிரான தீர்ப்புடன் இணைத்துப் பார்க்கும்போது இந்த விடயமும் நன்கு புலப்படுவதை அவதானிக்க முடியும்.**

**ஊழல் என்பது அனைத்து நாடுகளையும் பாதிக்கும் ஒரு சிக்கலான சமூக, அரசியல் மற்றும் பொருளாதார நிகழ்வு என்று ஐ.நா கூறுகின்றது. ஊழல் ஜனநாயக நிறுவனங்களை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது, பொருளாதார வளர்ச்சியை குறைக்கிறது மற்றும் அரசாங்க உறுதியற்ற தன்மைக்கு பங்களிக்கிறது.**

**தேர்தல் நடைமுறைகளை சிதைத்து, சட்டத்தின் ஆட்சியைசீர்குலைத்து, அதிகாரத்துவபுதைகுழிகளை உருவாக்குவதன் மூலம் ஜனநாயக நிறுவனங்களின் அடித்தளத்தை ஊழல் தாக்குகிறது, அதன் ஒரே காரணம் லஞ்சம் கேட்பது மட்டுமே. அந்நிய நேரடி முதலீடு ஊக்கமளிக்கப்படாததாலும், நாட்டில் உள்ள சிறு வணிகங்கள் ஊழலின் காரணமாக 'தொடக்க செலவுகளை' சமாளிக்க முடியாமல் போவதாலும் பொருளாதார வளர்ச்சி தடைபடுகிறது.**

**சிங்கப்பூரின் மிகவும் மதிக்கப்படும் முன்னாள் பிரதமர் லீ குவான் யூ கூறுவது போல், சீன கன்பூசியன் சமூகத்தின் அசல் கம்யூனிசம், நிலப்பரப்பில் குடும்ப உறவுகளின் அமைப்பு மற்றும் ஊழலாக சீரழிந்துள்ளது. அசல் அமைப்பின் தீமைகளின் எச்சங்கள் தைவான், ஹாங்காங் மற்றும் சிங்கப்பூரில் இன்னும் காணப்படுகின்றன.**

# வளமான வாழ்வின் அடித்தளம்

இராதாகிருஷ்ணன்



மற்றவர்களுடன் சகிப்புத்தன்மையுடன் இருங்கள், உங்களுடன் கண்டிப்புடன் (ஒழுக்கமாக) இருங்கள் என்பது தத்துவ ஞானியும், ரோமானிய பேரரசருமான மார்க்ஸ் ஆரோலியஸின் கூற்றாகும்.

வாழ்க்கையில் மனிதனுக்கு வேண்டிய பல்வேறு குணங்களில் தலையாயது சகிப்புத்தன்மையும், சுய ஒழுக்கமும் தான். இந்தக் கால மனிதாகளிடையே சகிப்புத்தன்மையும், சுயஒழுக்கமும் குறைந்து வருவதே சமுதாயத்தில் ஏற்படும் பல பிரச்சினைகளுக்குக் காரணம். இவை இரண்டும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றவை. ஒன்று சரியாக இருந்து, மற்றொன்று சரியாக இல்லை என்றால் வாழ்க்கை பிரகாசிக்காது.

நாம் செய்யும் செயல்களில் நிதானத்தைக் கடைப்பிடிக்க, பொறுமையாகவும், புரிந்துணர்வுடனும், அக்கறையுடனும் செயல்பட இவ்விரு பழக்கங்களும் அவசியம் தேவை. ஒருவர் கொண்டிருக்கும் சகிப்புத் தன்மையிலும், சுயஒழுக்கத்திலும் தான் மானுடத்தின் மேன்மை அடங்கியிருக்கிறது.



சகிப்புத்தன்மையும், சுய ஒழுக்கமும் நாளும் கடைப்பிடிக்க வேண்டிய பெரும் குணங்களாகும். இவற்றை பெற்றோரும், ஆசிரியர்களும் குழந்தைகளுக்கு சிறு வயதிலேயே கற்றுக் கொடுத்தால்தான் வாழ்நாள் முழுவதும் அவர்களால் கடைப்பிடிக்கமுடியும்.

சகிப்புத்தன்மை குறித்துக் கூறவந்த திருவள்ளுவர், நேர்மை அல்லாததைத் தனக்குப் பிறர் செய்யினும் மனம் வருத்தத்தால் தூண்டப்பட்டு அறன் அல்லாததைச்செய்யாமல் இருத்தல் நன்று என்கிறார்.

சகிப்புத்தன்மை என்பது நமக்குநோந்த துன்பத்தை மறந்து, பொறுத்து விட்டுக்கொடுப்பதே. ஒருவா தமக்குப் பிறர் செய்த தீங்கை பொறுத்துப் பெரிதுபடுத்தாது, சகித்துக் கொள்ளுவதால், சமுதாயத்துக்கும், குடும்பத்துக்கும், தனக்கும் நன்மை செய்தவராகிறார். தீமை செய்தோர் வருந்தி தம் தவறைத் திருத்திக் கொள்ள வாய்ப்பும் உண்டாகும். பொறுத்துக் கொள்ளும் மேன்மை குணத்தால் கெடுதல் ஏதுமின்றி இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படாமல் நன்மையே தொடரும்.

சகிப்புத்தன்மையை எப்போதும் எல்லோரும் ஏற்றுக் கொள்வது என்பது தனியான ஒரு செயல் அல்ல. எல்லாவற்றையும், நன்மையாயினும், தீமையாயினும் இவையெல்லாம் வாழ்க்கையின் ஓா அங்கமே; எல்லாம் நன்மைக்கே என்ற மனப்பக்குவத்துடன் ஏற்றுக் கொண்டாலே போதும், சுய ஒழுக்கம் தானே நம்மை வந்து தொற்றிக் கொள்ளும்.

நாம் சுய ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கும்போது மற்றவர்களிடம் நாம் காட்டும் சகிப்புத்தன்மை மேலும் வளரும். சகிப்புத் தன்மை என்பதே சமூக நல்லிணக்கம் மற்றும் புரிதலுக்கான ஓர் அடையாளமாகும். அதாவது, சகிப்புத்தன்மை என்பது எப்போதும், எவரும் கூறும் கருத்துகளைப் பொறுத்துக் கொண்டு போவது அல்ல; மாறாக, மற்றவர்களின் குறைகள், முரண் பட்ட கருத்துகள், வேறுபாடுகளை மறந்து அவர்களுடன் எப்போதும் போல் இயல்பாக பழகி சமூக உறவை மேம்படுத்துவ தையே குறிக்கிறது. இது, பலதரப்பட்ட கருத்துகள் மற்றும் நம்பிக்கைகளைக் கொண்டவர்களோடு இணைந்து வாழ நமக்கு கற்றுக் கொடுக்கிறது. சகிப்புத்தன்மை, சுய ஒழுக்கத்தைப் பேணுவதன் மூலம் நாம் மிகவும் இரக்கமுள்ள மற்றும் புரிந்துகொள்ளும் தன்மையைக் கொண்டவாகளாகிறோம்.

எவரிடம் விமாசனங்களை தாங்கிக் கொள்ளும் சக்தி இருக்கிறதோ, அவரே சகிப்புத் தன்மையுடையவா. மற்றவர் கருத்துக்கு எதிராக விமர்சனங்களை வைக்கும்போது சகிப்புத்தன்மையுடன் சுய ஒழுக்கமும் வேண்டும். இது இன்றைக்கு சமுதாயத்தில் அருகி வருகிறது. ஒருவா தனது குறிக்கோளில் வெற்றி அடைய வேண்டுமானால், அவரின் அன்றாட வாழ்க்கையில் சுய ஒழுக்கம் என்பது மிகவும் இன்றியமையாதது. அத்துடன் அவருக்கு அவரே நோமையானவராகவும் இருக்க வேண்டும்.

பன்முகத் தன்மை என்பதே ஜனநாயகத்தை ஏற்றுக் கொள்வதேயாகும். பல்வேறு ஜாதி, மதம், கலாசாரம் என பன்முகத்தன்மையை ஏற்றுக்கொண்டு, அதைப் போற்றுவதிலும் சகிப்புத்தன்மையும், சுய ஒழுக்கமும் அடங்கியிருக்கிறது.

இன்று பல நாடுகளில் சகிப்புத்தன்மையின்மையும், சுய ஒழுக்கமின்மையும் அமைதிக்கும், மக்களாட்சிக்கும் பெரும் இடையூறாக இருப்பதுடன், சமுதாய மேம்பாட்டுக்கும், நாட்டின் முன்னேற்றத்துக்கும் தடையாக உள்ளன. இதனால், மொழி, மதம், சிறுபான்மையினா, இடம் பெயர்வோர், அகதிகள், வெளி நாட்டுக் குடியேறிகள் எனப் பல்வேறு தரப்பினா தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருவதைக் காண்கிறோம். சுய ஒழுக்கமும் சகிப்புத்தன்மையும் இல்லாத நாடுகளில் மக்களாட்சி வளராது.

பெற்றோா பிள்ளைகள் முன்பாகவும், ஆசிரியாகள் மாணவர்கள் முன்பாகவும், முதலாளிகள் தொழிலாளர்கள் முன்பாகவும், அதிகாரிகள் அலுவலர்கள் முன்பாகவும், அரசியல்வாதிகள் தொண்டர்கள் முன்பாகவும் சகிப்புத்தன்மையையும், சுய ஒழுக்கத்தையும் கடைப்பிடித்தால் அங்கு யாருக்கும், யாரிடமும் எந்தப் பிரச்சினையும் எழாது. இருவருக்கும் இடையேயான சுமுக உறவு மேம்பட்டு, ஒற்றுமை மேலோங்கும். விட்டுக்கொடுத்தவாகள் கெட்டுப்போனதில்லை. நம்மைச் சுற்றி சமுதாயத்தில் சகிப்புத்தன்மை, தனிமனித ஒழுக்கம் குறைந்து கொண்டே போனால் மனித வாழ்க்கை சிறக்காது.

ஒழுக்கத்தைப் புத்தகங்களிலி ருந்து பெற முடியாது. ஆசிரியர்களிடமிருந்தும் கற்றுக் கொள்ள முடியாது. ஒருவரின் கடமைகளை நிறைவேற்றுவதில், அது வாழ்வின் ஓர் இயல்பான அங்கமாக இருக்க வேண்டும்.

நமக்கு பிடிக்காத சில விடயங்கள், நிகழ்வுகள் அவ்வப்போது நடைபெறுகின்றன. அப்படிப்பட்ட சமயங்களில் நாம் சகிப்புத்தன்மையுடனும், சுய ஒழுக்கத்துடனும் நடந்து கொண்டால் எந்தப் பிரச்சினையும் நம்மை அண்டாது.

சகிப்புத்தன்மை என்பது நமக்கு நோந்த துன்பத்தை மறந்து, பொறுத்து விட்டுக்கொடுப்பதே. ஒருவா தமக்குப் பிறர் செய்த தீங்கை பொறுத்துப் பெரிதுபடுத் தாது, சகித்துக் கொள்ளுவதால், சமுதாயத்துக்கும், குடும்பத்துக் கும், தனக்கும் நன்மை செய்த வராகிறார். தீமை செய்தோர் வருந்தி தம் தவறைத் திருத்தி க் கொள்ள வாய்ப்பும் உண்டாகும். பொறுத்துக் கொள்ளும் மேன்மை குணத்தால் கெடுதல் ஏதுமின்றி இயல்பு வாழ்க்கை பாதிக்கப்ப டாமல் நன்மையே தொடரும்.

காலைக்கதிர் Kalaikkathir

# தரமற்ற எரிபொருள் விநியோகம் தொடர்பான சஜித்தின் கூற்றில் எந்த உண்மையும் இல்லை

## அடியோடு மறுக்கிறார் அமைச்சர் காஞ்சன



நாட்டில் தரமற்ற எரிபொருள் கொள்வனவு செய்யப்பட்டு விநி யோகிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும்எதிர்க்கட்சித்தலைவரின் கூற்றை முற்றாக நிராகரிக்கிறோம்.

அத்துடன் அவ்வாறு தரமற்ற எரிபொருளை விநியோகிக்க நாங்கள் அனுமதி வழங்கியிருந்தால் அதுதொடர்பில் நீதிமன்றத்தை நாடலாம் என மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ, தரமற்ற எரிபொருள் விநியோகிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தெரிவித்திருந்த கருத்துக்கு பதில் அளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

நான் சபையில் இல்லாத சந்தர்ப்பத்தில்எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ, நாட்டிற்கு இறக்குமதி செய்யும் எரிபொருள் தொடர்பில் கூற்றொன்றை முன்வைத்துள்ளார்.

இதற்கு முன்னர் இரண்டு வாரங்களுக்கு முன்பும் எதிர்க்கட்சித் தலைவர் இதுபோன்ற ஒரு குற்றச்சாட்டை சபையில் முன் வைத்தார். அந்த சந்தர்ப்பத்திலும் நாம் பதில் வழங்குகையில் இந்த நாட்டிற்கு இறக்குமதி செய்யும் எரிபொருள் தரம் தொடர்பில் தெரிவித்திருந்தோம்.

அந்தத் தரம் தொடர்பான நடவடிக்கைகளை பெற்றோலியக் கூட்டுத்தாபனமே மேற்கொள்கின்றது. குறித்த முனையத்தில் பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னரே எரிபொருள் விநியோகம் நடைபெறுகிறது.

அந்த வகையில் தரமற்ற எரிபொருள்திருகோணமலைக்கோ கொலன்னாவைக்கோ அல்லது வேறு எந்த பிரதேசத்துக்கும் அனுப்பப்படுவதில்லை.

எதிர்க்கட்சியின் குற்றச்சாட்டுகளை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம். தரமற்ற அல்லது தர நிர்ணயம் தொடர்பான அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படாத எந்தவித எரிபொருளும் கப்பலில் இருந்து இறக்கப்பட மாட்டாது. அதற்கான அனுமதியும் வழங்கப்படவில்லை. அத்துடன் தரமற்ற எரிபொருள்இறக்குமதிசெய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளதாக பத்திரிகைகளிலும் அது தொடர்பில் செய்திகள் வெளிவந்துள்ளன. அந்த செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை. அதனால் அவ்வாறு தரமற்ற எரிபொருளை விநியோகிப்பதற்கு நாங்கள உத்தரவிட்டிருந்தால் இவர்கள் நீதிமன்றம் சென்று சட்ட நடவடிக்கை எடுக்கலாம். – என்றார். (05)

# ஹெரோயின் போதையுடன் ஒருவர் நீர்கொழும்பில் கைது

நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் நீர்கொழும்புபெரியமுல்லபிரதேசத்தை சேர்ந்த 27 வயதுடையவர் ஆவார்.

நீர்கொழும்பு பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில்சந்தேகநபர்கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த சோதனையில் 05 கிராம் 320 மில்லிகிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நீர் கொழும்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# இலங்கை கிரிக்கெட் தடை செய்யப்பட்டமைக்கு ஜனாதிபதியும் அரசும் பொறுப்புக் கூறவேண்டும்

## சாடுகிறார் சஜித் பிரேமதாஸ

இலங்கை கிரிக்கெட் சபையின் பிரதானிகள் சர்வதேச கிரிக்கெட் பேரவையிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமையவே இலங்கை கிரிக்கெட் தடை செய்யப்பட்டது.

அதனால் இந்த பிரதானிகளை ஜனாதிபதியும் அரசாங்கமும் பாதுகாப்பதாக இருந்தால் கிரிக்கெட் தடைக்கு இவர்களும் பொறுப்புக்கூற வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

எமதுநாட்டுக்குகிரிக்கெட்விளையாட்டு தடைசெய்யப்படப்போவதாக பலரும் தெரிவித்து வந்தனர். ஆனால் இலங்கை கிரிக்கெட்டை தடைசெய்யுமாறு சர்வதேச கிரிக்கெட் பேரவையிடம் கோரிக்கை விடுத்தது யார் என்பதை ஜனாதிபதி மற்றும் நாட்டில் இருக்கும் விசாரணைகுழு தேடிப்பார்க்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு சர்வதேச கிரிக்கெட் பேரவையிடம் கோரிக்கைவிடுத்தவரையேஜனாதிபதி உட்படஇந்தஅரசாங்கம்பாதுகாக்காத்து வருகிறது.

அதனால் எமது நாட்டின் கிரிக்கெட்டை தடை செய்யுமாறு கோரிக்கை விடுத்தவர்களை இந்த அரசாங்கம் பாதுகாப்பதாக இருந்தால், சர்வதேசகிரிக்கெட்பேரவை இலங்கை கிரிக்கெட்டை தடை செய்தமைக்கு ஜனாதிபதியும் அரசாங்கமும் பொறுப்புக்கூற வேண்டும்.

சர்வதேசகிரிக்கெட் பேரவையிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமையவே கிரிக்கெட் தடை செய்யப்பட்டது. இந்த கோரிக்கையை விடுத்தது, இலங்கை கிரிக்கெட் சபையின் பிரதானிகளாவர். அந்தக் கோரிக்கை நிகழ்நிலையில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போதே விடுக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன் நாங்கள் தெரிவிப்பது பொய்யாகஇருந்தால், இந்தநிகழ்நிலை கலந்துரையாடலில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையை பிரதி நிதித்துவப்படுத்தி கலந்துகொண்ட அந்த பிரதிநிதியிடம் கேட்டுப்பார்க்கலாம்.

அதனால் இலங்கை கிரிக்கெட்டை தடைசெய்யுமாறு சர்வதேச கிரிக்கெட் பேரவையிடம் கோரிக்கை விடுத்த இலங்கை கிரிக்கெட் சபையின் பிரதானிகளைப் பாதுகாக்கின்ற ஜனாதிபதியும் இந்த அரசாங்கமுமே இதற்குப் பொறுப்புக்கூற வேண்டும். – என்றார். (05)

# உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் ஒருவர் கைது

பொலன்னறுவை – சிரிபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் சந்தேக நபர் ஒருவர் சிரிபுர பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் நுவராகல பிரதேசத்தை சேர்ந்த 52 வயதுடையவர் ஆவார்.

சிரிபுரபொலிஸ்நிலையஅதிகாரிகளுக்குகிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சிரிபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City


கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)



பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சநேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Korhu Rorty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Crem & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cococola M - 70/=
Pepsi M - 70/=
Swhppes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களை தாக்கி ஒருவரை கூரிய ஆயுதத்தால் குத்தியவர் கைது

குளியாப்பிட்டிய கிரியுல்ல பிரதேசத்தில் போக்குவரத்துப் பிரிவில் கடமையாற்றும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களை தாக்கி பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை கூரிய ஆயுதத்தால் குத்தி காயப்படுத்திய பிரதான சந்தேக நபர் கிரியுல்ல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரும் தம்பதெனிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்கப்பட்ட இரு பொலிஸ் உத்தியோகத்தரும் கிரியுல்ல சமன்கல பிரதேசத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த போது சோதனை நடவடிக்கைக்காக ஓர் ஓட்டோவை நிறுத்த முற்பட்ட போது குறித்த ஓட்டோவின் சாரதி வாகனத்தை நிறுத்தாமல் சென்றுள்ளார்.

இதனால் இரு பொலிஸ் உத்தியோகத்தரும் மோட்டார் சைக்கிளில் துரத்திச் சென்று ஓட்டோவை நிறுத்தியுள்ளனர்.

இதன்பின்னர்சோதனைகளை மேற்கொண்ட பொலிஸார், ஓட்டோவின்சாரதிமதுபோதையில் இருப்பதைஅவதானித்தநிலையில், அவரை கைதுசெய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதன்போதே குறித்த நபர் பொலிஸார் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிரியுல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# மோட்டார் சைக்கிள் மோதியதில் பொலிஸ் உத்தியோகத்தர் சாவு

## மஹியங்கனையில் சம்பவம்

மஹியங்கனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மோட்டார் சைக்கிள் மோதியதில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என மஹியங்கனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் மஹியங்கனை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் மஹியங்கனை, தம்பராவ பிரதேசத்தை சேர்ந்த 37 வயதுடைய பொலிஸ் உத்தியோகத்தர் ஆவார். உயிரிழந்தவரின் சடலம் மஹியங்கனை வைத்தியசாலையில் பிரேத பரிசோனைக்காக வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச்சம்பவம்தொடர்பானமேலதிக விசாரணைகள் மஹியங்கனை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (05)

# மகளை அடித்துத் துன்புறுத்திய நபருக்கு இரு ஆண்டுகள் சிறை

*யாழ்ப்பாணம் - ஊர்காவற்துறை பகுதியில் தனது 4 வயது மகளை அடித்து துன்புறுத்திய நபருக்கு 2 வருடங்கள் சிறை தண்டனை விதித்து ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.*

*குறித்த நபர் தனது மனைவியைப் பிரிந்து தனது மகளுடன் வாழ்ந்து வந்த நிலையிலேயே இவ்வாறு தனது மகளை அடித்துத் துன்புறுத்தி வந்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.*

*அத்துடன் தனது மகளை துன்புறுத்தும் வீடியோக்களையும் சமூகவலைத்தளங்களில் குறித்த நபர் பகிர்ந்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.*

*இச்சம்பவம் பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டதையடுத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.*

*அதேசமயம் அச்சிறுமியும் சிறுவர் காப்பகத்தில் சேர்க்கப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது. இந்நிலையில் குறித்த வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது குறித்த நபருக்கு 2 வருட சிறை தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (05)*

# பாம்பு தீண்டியதால் குடும்பஸ்தர் சாவு

## யாழ்ப்பாணத்தில் துயரம்

இரத்த புடையன் பாம்பு தீண்டியதில் மயக்கமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நான்கு பிள்ளைகளின் தந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் கைதடி மத்தி, கைதடியைச் சேர்ந்த 55 வயதுடைய அருச்சுணன் சுந்தரலிங்கம் என்பவராவார்.

கடந்த 31ஆம் திகதி மாலை 4.00 மணியளவில் மனைவியுடன் தோட்டத்தில் களை பிடுங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது இரத்தப்புடையன் பாம்பு அவரை கையில் தீண்டியதை அடுத்து உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது அவர் மயக்கம் அடைந்த நிலையில் காணப்பட்டார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

இம்மரணம் தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணையை மேற்கொண்டார்.

பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டது. (05)

# தொழில் நிமித்தம் கம்பஹா சென்ற யாழ். குடும்பஸ்தரை காணவில்லை



தொழில் நிமித்தனம் கம்பஹா சென்ற தனது கணவருடன் இதுவரை எவ்வித தொடர்பும் இல்லையென அவரது மனைவி பொலிஸில் முறைப்பாடளித்துள்ளார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 28 ஆம் திகதி அன்று கம்பஹா மாவட்டத்திற்கு வேலைக்குச் செல்வதாக கூறிவிட்டு சென்றவத்திராயன் வடக்கைச்சேர்ந்த கணேசலிங்கம் தினேஸ் எனும் 38 வயதுடைய நபரே காணாமல் போயுள்ளார் என அவரது மனைவி மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு வத்திராயனிலிருந்து கடந்த 28 ஆம் திகதி கம்பஹாவிற்கு சென்றுள்ளதாகவும், அங்கு தொடர்ந்தும் வேலை செய்து வருவதாகவும் கடந்த மாதம் 30 ஆம் திகதி காணாமல்போன குறித்த நபர் தன்னுடன் பேசியதாக மனைவி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், கடந்த 30 ஆம் திகதி முதல் இன்றுவரை தனது கணவருடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன என மனைவி தெரிவித்துள்ளதுடன் தனது கணவரைக் கண்டுபிடித்துத் தர ஆவண செய்து உதவுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

தகவல் தெரிந்தவர்கள் மருதங்கேணிபொலிஸ்நிலையபொறுப்பதிகாரி 94 77 363 3578 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அறியத்தரவும். (05)



காலைக்கதிர் Kalaikkathir

## காங்கேசன்துறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தின் பணிப்பாளர் நிரஞ்சன் நந்தகோபன் தெரிவித்தார்.

இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட ஸ்ரீ கப்பல் சேவைகள் தனியார் நிறுவனம் இந்தச் சேவையை நடத்தவுள்ளது. இந்தச்சேவைக்கென இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட 'சிவகங்கை' என்ற கப்பல் பயன்படுத்தப்படவுள்ளது.

"கப்பல் டிசெம்பர் மாத நடுப் பகுதியளவில் நாகபட்டினத்திற்கு கொண்டுவரப்படும். இக்கப்பலில் 150 பயணிகள் பயணம் செய்யமுடியும். தலா 60 கிலோ பொதிகள் அனுமதிக்கப்படும். ஒருவழிப் பயணக் கட்டணமாக 4,250 இந்திய ரூபாயும் மற்றும் வரிகளும் அறவிடப்படும். அத்தோடு ஒருவழிப் பயணக் கட்டணமாக 17,000 இலங்கை ரூபாய் மற்றும் வரிகள் அறவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது" என்று நிரஞ்சன் தெரிவித்தார்.

இதற்கான முற்பதிவுகளை தொலைபேசி செயலி மற்றும் இணைவழிகளில் மேற்கொள்ள வாய்ப்புக்கள் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## பொலிஸ் மா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இழுபறியில் நிற்கின்றது.

இதையடுத்து சி.டி.விக்கிரமரத்னவுக்கு இரண்டு தடவைகள் அரசமைப்புப் பேரவையின் அனுமதியுடன் தலா மூன்று மாத கால சேவை நீடிப்பு வழங்கப் பட்டது. மூன்றாவது தடவையாக அவருக்கு மூன்று வார கால நீடிப்பு வழங்கப்பட்டபோது அதனை அரசமைப்புப் பேரவை நிராகரித்தது. இப்போது நான்காவது தடவையாக மூன்று வார காலம் அவருக்கு மீண்டும் சேவை நீடிப்பு வழங் கப்பட்டிருப்பதையும் பேரவை நிராகரித்துள்ளது.

## சீன அதிபரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிருக்கும் சீனத் தூதுக் குழுவினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன உள்ளிட்ட அரச உயர் மட்டத் தலைவர்களைச் சந்தித்து இருதரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளனர்.

கொழும்புத் துறைமுக நகரத் திட்டம், அம்பாந்தோட்டையில் சீனா அமைக்க உத்தேசித்துள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் உட்பட பல்வேறு சீன முதலீட்டு திட்டங்கள் தொடர்பில் அரச தரப்பினருடன் சீனக் குழுவினர் கலந்துரையாடவுள்ளனர். கண்டி தலதா மாளிகை உள்ளிட்ட பல இடங்களுக்கும் அவர்கள் நேரில் செல்லவுள்ளனர்.

மாலைதீவின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப் பட்டுள்ள முகமது முய்சுவின் பதவியேற்பு நிகழ்வில் வெள்ளிக் கிழமை பங்கேற்றிருந்த சீனத் தூதுக்குழுவினர் அங்கிருந்து இலங்கை வந்துள்ளனர்.

## உருக்குலைந்த ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிராம சேவகர் அலுவலகத்திற்கு நவம்பர் 14 அன்று வந்த ஒருவர் அலுவலகத்தைச் சேதப்படுத்தும் விதத்தில் செயற்படுகின்றார் என்றும் பார்ப்பதற்கு அவர் மனநலம் பாதிக்கப்பட்டவரைப் போன்று காணப் படுகின்றார் என்றும் என ஊர் மக்கள் கிராம அலுவலருக்கு தொலைபேசியூடாகத் தகவல் தந்திருந்தனர். அப்போது கூட்டம் ஒன்றில் இருந்த கிராம சேவகர் பொலிஸாருக்கு இது குறித்து தெரியப்படுத்தியிருந்தார்.

அந்தச் சந்தேகநபரை தாம் பின்னர் அழைத்துச்சென்றிருந்தனர் என்று பொலிஸாரால் கிராம அலுவலருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது என்று கூறப்படுகின்றது. சந்தேகநபரின் ஒளிப்படம் ஊர் மக்கள் கிராம சேவகருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அந்த புகைப்படத்தில் இருக்கின்ற நபரின் உடைகளும் பொன்னாலையில் புதருக்குள் கண்டுபிடிக்கப்பட்ட சடலத்தில் இருக்கின்ற உடைகளும் ஒத்துப் போகின்றன என்ற ஊர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

## யாழ்ப்பாணத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாது காக்கும் நோக்கத் துடனும் தமிழர் களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடனும் மார்கழி இசை விழாவும் வட மாகாணத்தைச் சேர்ந்த சிறிய நடுத்தர உற்பத்தியாளர்களது உற்பத்தி கண்காட்சியும் வரும் டிசெம்பர் 27, 28, 29 நடத்தப்படவுள்ளது. யாழ்ப்பாண கலாச்சார மத்தியநிலைய உட்புற மண்டபத்திலே இசைவிழாவும் வெளிப்புறத் திடலிலே சிறிய நடுத்தர உற்பத்தியாளர்களது உற்பத்திக் கண்காட்சி மற்றும் விற்பனையும் இடம்பெறவுள்ளது

வெளிநாட்டுசந்தைவாய்ப்பினை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இலங்கை ஏற்றுமதி அதிகார சபை மற்றும் ஏற்றுமதி துறை சார்ந்த பல அனுபவம் வாய்ந்த ஏற்றுமதியாளர்கள் எல்லோரையும் இந்தக் கண்காட்சிக்கு அழைத் திருக்கின்றோம்.

மற்றொரு சிறப்பம்சமாக சிறிய நடுத்தர உற்பத்தியாளர்களது உற்பத்திகளுக்குத் தேவையான புதிய தொழில்நுட்பங்களுடன் கூடிய இயந்திரங்களை இந்தியாவில் இருந்து எடுத்து வந்து காட்சிப்படுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இசைநிகழ்வில் யாழ். மாவட்டக் கலைஞர்கள் மாத்திரமல்லாது, வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த கலைஞர்கள் பங்கேற்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.



# வடக்கில் விவசாய முதலீடுகளை செய்யவிரும்புவோருக்கு அழைப்பு

## மாகாண ஆளுநர் விடுப்பு

வடக்கில் விவசாய முதலீடுகளை மேற்கொள்ள விரும்புவோருக்கான அனைத்து ஒத்துழைப்புகளும் வழங் கப்படும் என வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி-இயக்கச்சி பகுதியில் வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில், தென்னம் பிள்ளைகள் நடும் செயற்திட்டம் வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடக்கில் மீள்குடியேற்றத் தின் பின்னர் வழங்கப்பட்ட தென்னம் பிள்ளைகள் இன்று மக்களின் வாழ்வாதாரமாக மாறியுள்ளதையிட்டு மகிழ்ச் சியடைகிறேன்.

அதேவேளை நட்புசார் விவசாயத்தை விஸ்தரிக்கும் நோக்கில் எதிர்வரும் ஜனவரி மாதம் புதிய கையடக்கத் தொலைபேசி செயலி ஒன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வடக்கில் விவசாய முதலீடுகளை மேற்கொள்ள விரும்புவோருக்கான அனைத்து ஒத்துழைப்புகளும் வழங்கப்படும். - இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில், வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ். கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், தென்னை பயிர்செய்கை சபையின் தலைவர் ஏ.வீ.கே.மாதவி ஹேரத், அரச உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இரண்டாவது தென்னை முக்கோண வலயம் கடந்த செப்ரெம்பர் மாதம் 02ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. யாழ்ப்பாணம், மன் னார், முல் லைத்தீவு ஆகிய 03 மாவட்டங்களுடன், வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களையும் உள்ளடக்கி வடக்கு தென்னை முக்கோண வலயம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. சுமார் 40 ஏக்கர் நிலப்பரப்பில் 03 மாதங்களுக்குள் நான்கு லட்சத்து 50 ஆயிரம் தென்னம் பிள்ளைகளை பயிர் செய்கை செய்யும் நோக்குடன் இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# கிரிக்கெட் மட்டையால் மனைவி தாக்கியதில் கணவன் உயிரிழப்பு

திஸ்ஸமஹாராம, கவுந்திஸ்ஸபுர பிரதேசத்தில் மனைவி தாக்கியதில் கணவன் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பெண் கிரிக்கெட் மட்டையால் கணவனின் தலையில் தாக்கியதில், பலத்த காயமடைந்த அவர் தெபரவெள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவத்தில் 47 வய-துடைய நபரே உயிரிழந்துள்ளார்.

தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய 42 வயதுடைய மனைவி திஸ்ஸமஹாராம பொலி-ஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (05)

# கையடக்க தொலைபேசி திருட்டில் ஈடுபட்டுவந்த மூவர் யாழில் கைது



யாழில், பஸ்களில் பயணம்செய்வர்களை இலக்கு வைத்து கையடக்கதொலைபேசி திருட்டில் ஈடுபட்டு வந்த மூவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

யாழ் நகரை அண்டிய வண்ணார் பண்ணை, பிரப்பங்குளம் சிவலிங் கபுளியடியை சேர்ந்த 24,31,33 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது குறித்த நபர்களிடமிருந்து நான்கு லட்சம் ரூபா பெறுமதியான 8 கையடக்க தொலைபேசிகள் கைப்பற்றப் பட்டுள்ளன எனவும் தெரி விக்கப் பட்டுள்ளது. (05)




காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# கோப்குழு பெண் அதிகாரியிடம் பாலியல் லஞ்சம் குழுவின் தற்போதைய தலைவருக்கும் தொடர்பா?

## ஹோஷா விதானகே குற்றச்சாட்டு



கோப் குழுவின் முன்னாள் தலைவர் கோப் குழுவின் பெண் அதிகாரியிடம் பாலியல் இலஞ்சம் கோரினார் என முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு பாரதூரமானது.

இந்த குற்றச்சாட்டால் ஒட்டுமொத்த தலைவர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே முறையான விசாரணை செய்து உண்மையை பகிரங்கப்படுத்துங்கள் என கோப் குழுவின் முன்னாள் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சரித ஹேரத் சபையில் வலியுறுத்தினார்.

கோப் குழுவின் முன்னாள் தலைவர்கள் கௌரவமான முறையில் செயற்பட்டார்கள். கோப் குழுவின் தற்போதைய தலைவர் நான் முன்வைத்த குற்றச்சாட்டுடன் தொடர்புப்பட்டுள்ளார்.

முறையான விசாரணை செய்யுங்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹோ விதானகே சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வின் போது ஒழுங்கு பிரச்சினையை முன்வைத்து உரையாற்றிய சுயாதீன உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் –

கோப் குழுவின் முன்னாள் தலைவர் கோப் குழுவின் பெண் அதிகாரியிடம் பாலியல் இலஞ்சம் கோரினார் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹோ விதானகே சபையில் குறிப்பிட்டார். இது பாரதூரமானதொரு குற்றச்சாட்டாகும்.

கோப் குழுவின் தலைவராகக் கடந்த காலங்களில் நான் பதவி வகித்தேன். அதேபோல் தற்போதைய நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டி.யு குணசேகர உட்பட பலர் பதவி வகித்துள்ளார்கள். இவர்கள் அனைவரும் கோப் குழுவின் கௌரவத்தைப்பாதுகாத்து குழுவின் நடவடிக்கைகளை சிறந்த முறையில் முன்னெடுத்தார்கள்.

ஹோ விதானகே எந்த அடிப்படையில் இவ்வாறான குற்றச்சாட்டை முன்வைத்தார் என்பதை நான் அறியவில்லை. ஆனால் அவர் முன்னாள் தலைவர் என்று குறிப்பிட்டுள்ளதால் சமூக வலைத்தளங்களில் ஒட்டுமொத்த தலைவர்களையும் தவறாகச் சித்திரிக்கும் வகையில் கருத்துக்கள் பறிமாற்றப்படுகின்றன. ஆகவே இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் முறையான விசாரணையை மேற்கொண்டு உண்மையைப் பகிரங்கப்படுத்துங்கள். – என்றார்.

இதன் போது எழுந்து உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹோ விதானகே இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத் என்னுடன் உரையாடினார். வாயில் விரல் வைத்து சைகை மூலம் அறிவுறுத்தல் விடுக்கும் கோப் குழுவின் தலைவர் தலைமையிலான குழுவில் இவ்விடயத்தை குறிப்பிட முடியாது என்பதால் சபையில் அறிவித்தேன்.

கோப் குழுவின் முன்னாள் தலைவர்கள் குழுவின் கௌரவத்தை பாதுகாக்கும் வகையில் சிறந்த முறையில் செயற்பட்டார்கள். முன்வைத்த குற்றச்சாட்டுடன் கோப் குழுவின் தலைவர் தொடர்புப்பட்டுள்ளார். ஆகவே முறையான விசாரணை நடத்துங்கள். – என்றார்.

நீதிமன்ற தீர்ப்புத் தொடர்பில் விமர்சிக்க எவருக்கும் உரிமை கிடையாது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும் தாம் நீதிமன்ற தீர்ப்புக்கு மதிப்பளிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பொருளாதார பிரச்சினை தொடர்பில் சபையில் கருத்துக்களை வெளியிடும்போது மத்திய வங்கி விவகாரத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் சம்பந்தப்பட்ட விடயத்தையும் அமைச்சர் பந்துல குணவர் தன தமது விளக்கத்தின் போது குறிப்பிட்டிருக்கலாம் எனத் தெரிவித்தார்.

உண்மையில் அந்த விடயமும் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருந்தால் இந்தத் தீர்ப்பு வேறு விதமாக அமைந்திருக்கலாம். முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் காலத்தில் புலிகளுக்கு ஆயுதம் வழங்கியதாக குறிப்பிடப்பட்டது. அதை சிலர் உறுதிப்படுத்தினார்கள். எனினும் எவரும் அது தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவில்லை.

அந்த வழக்கு தொடரப்பட்டிருந்தால் அதுவும் நாட்டின் பொருளாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தியது என்றும் குறிப்பிட்டிருக்க முடியும். 88, 89 காலகட்டங்களில் நாட்டிலுள்ள வளங்களை தீவைத்துக் கொளுத்தியவர்கள், ரயில் மற்றும் பஸ்களை தீவைத்தவர்கள், மனிதப் படுகொலையை செய்தவர்கள், கப்பம் பெற்றவர்கள் ஆகியோரும் இந்த வழக்கோடு சம்பந்தப்பட்டிருக்க வேண்டும். அதனால் இந்த விடயத்தை வேறு விதமாக திசைதிருப்ப இடமளிக்கக் கூடாது. – என்றார். (05)

# புதிய சுகாதார செயலராக பாலித மஹிபால நியமனம்?



சுகாதார புதிய செயலாளராக முன்னாள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் பாலித மஹிபால நியமிக்கப்படவுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

மருத்துவநிபுணரான வைத்தியர் மஹிபால 2019 ஆம் ஆண்டில் பாகிஸ்தானுக்கான உலக சுகாதார அமைப்பின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். உலக சுகாதார அமைப்பின் பிரதிநிதியாக நியமனம் பெறுவதற்கு முன்பு சுகாதார செயலாளராகவும் பிரதி பொது சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமாகவும் பணியாற்றியுள்ளார். இவர் பொது சுகாதாரம், சுகாதார துறை முகாமைத்துவம், வணிக நிர்வாகம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஆகிய துறைகளில் தகுதி பெற்றவராவார்.

இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தின் இலங்கையின் முதுகலை மருத்துவ நிறுவனத்தில் விரிவுரையாளர் மற்றும் பரீட்சை ஆணையாளராக இருந்தார். இவரது கட்டுரைகள் பல தேசிய மற்றும் சர்வதேச பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன. (05)

# சுழிபுரத்தில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபரை கைதுசெய்ய முயன்ற பொலிஸ் மீது தாக்குதல்!

யாழ்ப்பாணம், சுழிபுரம் - பறாளாய் பகுதியில் வசிக்கும் நபர் ஒருவருக்கு நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் வெள்ளிக்கிழமை வட்டுக்கோட்டை பொலிஸார் சிலர் குறித்த நபரை கைதுசெய்வதற்காக அந்த பகுதிக்கு சென்று, பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபரை கைது செய்ய முற்பட்டனர். இதன்போது அங்கிருந்தவர்கள் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியுள்ளதுடன் இதனால் அந்த பகுதியில் பதற்றமான சூழ்நிலை நிலவியுள்ளது. (05)

# களனிதிஸ்ஸ மின்னுற்பத்தி நிலையம் 6 வாரங்களுக்கு மூடப்படுகின்றது

பராமரிப்பு பணிகளுக்காக களனிதிஸ்ஸ மின்னுற்பத்தி நிலையம் 6 வாரங்களுக்கு மூடப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

165 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் களனிதிஸ்ஸ மின்னுற்பத்தி நிலையத்தின் எரிவாயு சுழலி ஆலை மற்றும் நீராவி சுழலி ஆலை இரண்டின் பராமரிப்பு பணிகள் வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டாவது மின் உற்பத்தி இயந்திரத்தில் திடீரென செயலிழந்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இரண்டாவது மின் உற்பத்தி இயந்திரத்தில் உயர் அழுத்த ஹீட்டர் அமைப்பு திடீரென செயலிழந்துள்ளது.

செயலிழந்த மின் உற்பத்திப் பிரிவில் திருத்தப் பணிகளில் தொழில்நுட்ப ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் செயலிழந்த நிலையில் இருந்த நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தின் 3 ஆம் அலகு, திட்டமிடப்பட்ட பாரிய சீரமைப்புப் பராமரிப்புப் பணிகளை நிறைவுசெய்துள்ளதோடு, தற்போது பரிசோதனை செய்யப்பட்டுள் வருகிறது.

அந்த வகையில், இந்த மின் உற்பத்தி அலகு கூடிய விரைவில் தேசிய கட்டத்துடன் இணைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும், தற்போதுள்ள சூழ்நிலையால் மின்சார தடை ஏற்படாது என இலங்கை மின்சார சபை மேலும் தெரிவித்துள்ளது. (05)

# யாழ்.திருநெல்வேலி பகுதியில் பிக்மீ சாரதி மீது தாக்குதல்!

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பகுதியில் பிக்மீ சாரதி ஒருவர் மீது தரிப்பிட ஓட்டோ சாரதிகள் ஒன்றுகூடி அச்சுறுத்தல் விடுத்ததுடன் தாக்குதலும் நடத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் பலாலி வீதியில், திருநெல்வேலி பழம் வீதி அருகில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

தாக்குதல் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுபதிவுசெய்யசென்றபோதும் பொலிஸாரும் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் நடந்ததாக பாதிக்கப்பட்ட பிக்மீ சாரதி கவலை வெளியிட்டார்.

ஓட்டோச் சாரதிகள் அதிக கட்டணம் அறவிட்ட நிலையில் செயலி வழியான ஓட்டோ சேவை மக்கள் மத்தியில் வரவேற்பை பெற்ற நிலையில் செயலி வழியான ஓட்டோச் சாரதிகள் அச்சுறுத்தலுக்கும் தாக்குதலுக்கும் உள்ளாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# வீதியில் கழிவுநீரை ஊற்றியவர்களை மடக்கிப் பிடித்தனர் பிரதேசவாசிகள்



யாழ்ப்பாணம் செம்மணி நாயன்மார்கட்டு பகுதியில் கழிவுநீரை ஊற்றி விட்டு செல்ல முயன்ற பவுஸர் ஒன்று அப்பகுதி மக்களால், வெள்ளிக்கிழமை மடக்கி பிடிக்கப்பட்டு சுகாதார பரிசோதகர்களிடம் ஒப்படைக் கப்பட்டது. திருநெல்வேலியில் உள்ள நட்சத்திர விடுதியொன்றின் கழிவு நீரை அகற்றும் பவுஸரே இவ்வாறு பிடிபட்டது.

வழமையாக இவ்வாறு கழிவுகளை ஊற்றி விட்டு செல்லும் பவுஸரை அவதானித்த அப்பகுதி மக்கள் வெள்ளிக்கிழமை காலை மறைந்திருந்து பவுஸரில் வந்தவர்கள் கழிவு நீரை ஊற் றும் போது கையும் களவுமாகப் பிடித்து சுகாதார பரிசோதகரிடம் ஒப்படைத்தனர். இவ்வாறான சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெறுவதால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதார ரீதியில் பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்வதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# மயிலத்தமடு, மாதவனைப் பகுதியில் மின்சாரம் தாக்கி பசுமாடு உயிரிழப்பு



மட்டக்களப்பு மயிலத்தமடு, மாதவனை கூளாவடி குளத்துவெட்டை பகுதியில் அத்துமீறிய பயிர் செய்கையிலீடுபடுவோரால் போடப்பட்ட மின்வேலியில் சிக்கி பசுமாடு ஒன்று உயிரிழந்துள்ளது.

பஞ்சாட்சரம் என்பவருடைய 4 வயது மதிக்கத்தக்க பசுவே இவ்வாறு வெள்ளிக்கிழமை இரவு உயிரிழந்துள்ளது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir




## கந்தானையில் துப்பாக்கி சூடு

மினுவாங்கொடை, கட்டுவெல்லேகம பிரதேசத்தில் தேங்காய் திருடிய நபர் ஒருவரை இலக்குவைத்துதுப்பாக்கிபிரயோகம் நடத்தப்பட்டுள்ளது.

32 வயதுடைய நபரொருவரே இவ்வாறு துப்பாக்கி பிரயோகத்திற்கு இலக்காகியுள்ளார் என கந்தானை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கி பிரயோகத்திற்கு இலக்கான நபர் தற்போது நீர்கொழு-ம்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் கந்தானை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## தாமரை கோபுரத்தில் 'பேஸ் ஜம்ப்'ஆரம்பம்!

கொழும்பு ,தாமரை கோபுரத்தில் 'பேஸ்ஜம்ப்'எனஅழைக்கப்படும்சாகச விளையாட்டு நேற்று (சனிக்கிழமை) முதல்ஆரம்பிக்கப்பட்டதுஎனதாமரை கோபுர நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அதன்படி,இன்றும்காலை9மணி முதல்இவ்விளையாட்டுஇடம்பெறும் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (05)

## இனிவரும் காலங்களில் அரசு மக்களை ஏமாற்ற முடியாது

### இம்தியாஸ் பாகிர் மார்கார் சுட்டிக்காட்டு

நாட்டு மக்களை இனிவரும் காலங்களில் ஏமாற்ற முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளும ன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாகிர் மார்கார் தெரிவித்துள்ளார்.

வரவு - செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதம் நாடாளுமன்றத்தில் தற்போது இடம்பெற்று வருகின்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அரசாங் கத்தின் பொய்களைநம்புவதற்குமக்கள்தயார் இல்லைஎன்றும்புதியமாற்றத்தையே எதிர்பார்க்கின்றனர் எனவும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

(05)

## 2 கருப்பைகள்,2 குழந்தைகள்: வைரலாகும் அதிசயப் பெண்



அமெரிக்காவின் அலபாமா மாகாணத்தை சேர்ந் தவர் கெல்சி ஹேட்சர். 32 வயதான இவருக்கு 2 கருப்பைகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பிறப்பிலேயே அரிய கருப்பை கொண்ட இவருக்கு காலேப் என்ற கணவரும், 3 குழந்தைகளும் உள்ளனர் .

இந்நிலையில் கெல்சி ஹேட்சர் மீண்டும்கர்ப்பம்தரித்துள்ளநிலையில், அவரது 2 கருப்பைகளிலும் 2 குழந்தைகளைசுமந்துவருகின்றமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனை கடவுளின் ஆசீர்வாதமாகக் கருதுவதாக கெல்சியும் அவரது கணவரும் தெரிவித்துள்ளனர்.

இது மருத்துவ வரலாற்றில் அரிய நிகழ்வாகப் பார்க்கப்படுகிறது. இந்நிலையில்'ஒவ்வொருகருப்பையும் வெவ்வேறு நேரங்களில் சுருங்க கூடும் என்பதால் குழந்தைகள் மணி நேரம், நாள்கள் அல்லது வாரங்கள் இடைவெளியில் பிறக்கலாம்' என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.11.2023இல் வெளியிடப்பெற்றது.